# மக்களுக்காக போராட்டம் நடத்திய பெரியார்!

## பேரறிஞர் அண்ணா!



**ச**மூக நீதியற்ற தன்மைகளுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்ட மக்களுக்காகத் தமிழ்நாட்டில் போராட்டத்தை நடத்தியவர் பெரியார் (ராமசாமி) அவர்களே. அதேபோன்று தெனாலியில் முதலில் குரல் எழுப்பியவர் ராமசாமி சவுதரி என்பவர் ஆவார். இந்த இருபெரும் சமூக சீர்திருத்தத் தலைவர்களுக்கும் ஒரே பெயர் பொருந்தியிருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. கடவுளின் அவதாரமென்று கூறப்படுகிற ராமசாமி யையும் அதையொட்டிய கருத்துக்களையும் நிறுவனங்களையும் எதிர்த்து ராமசாமி என்ற பெயருள்ள இரு பெரியார்களும் கண்டனமாரிகளைப் பொழியும் பிரச்சாரங்களைச் செய்யும் தகுதி பெற்றவர்களாகியுள்ளனர்.

தமிழ்நாட்டில் நாங்கள் இந்தப் பிடிவாத மான மக்களை எங்களுடைய கருத்துக்களுக்கு ஏற்ப வளைத்துக் கொண்டு வருவதற்கு இருபதாண்டுக் காலமாக விவாதித்து வந்திருக்கிறோம்; இறுதியாக நாங்கள் வெற்றி பெற்றோம். பூமியில் உள்ள தீமையை ஒழிக்கக் கடவுள் 10 அவதாரங்களுக்குக் குறையாமல் எடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனாலும் தீமைகள் முழுவதும் ஒழிந்தபாடில்லையே! மனிதர்களாகிய நமக்குத்தான் தீமைகளுக்கு எதிராகப் போரிட்டு. அதை வேரோடு ஒழித்துக்கட்டும் மிக உயர்ந்த கடமை ஏற்பட்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, சுயமரியாதைக் காரர்களாகிய எங்களில் சிலர் சுயமரியாதைத் திருமணம் என்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்த, போலீஸ் உதவியை நாட வேண்டியதாய் இருந்தது. அந்தத் திருமணங்கள் குருக்கள் இல்லாமலும். மந்திரங்கள் சொல்லப்படாமலும், ஓமத் தீ இல்லாமலும் நடத்தப்படும் திருமணங்கள் ஆகும்.

ஒரு கிராமத்தில் பெரியார் (ராமசாமி) அவர்களும் நானும் ஒரு சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைக்கச் சென்ற போது, போலீஸ் அதிகாரி ஒருவர் எங்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படிச் சொல்லி அனுப்பினார் நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றபோது. எங்களைக் கைதுசெய்யவோ. காவலில் வைக்கவோ அழைக்கவில்லை யென்றும். சனாதனிகளால் தொல்லை நேராது எங்களைப் பாதுகாக்கவே அழைத்ததாகவும் அந்தப் போலீஸ் அதிகாரி கூறினார் ஆனால் இன்றோ தமிழ்நாடெங்கும் அத்தகைய சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அவைகள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியான மசோதாவொன்று நான் கொண்டுவந்து நிறைவேற்றி விட்டேன்."

**(ஆந்திராவிலுள்ள தெனாலியில் கவிராசு ராமசாமி சவுதரிஆவுல கோபால கிருஷ்ண மூர்த்தி "பவ விகாச கேந்திர"த்தை 29.1.1968 அன்று திறந்து வைத்து அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை )**

# கல்வி!



**க**ல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் எல்லாம், ஒருவன். தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு

வாழ்வதற்குத் தகுதிப் படுத்துவது என்பதே ஆகும். அல்லது, உலகில் நல் வாழ்க்கை வாழத் தகுதி உடையவனாக்குவது என்பதாகும். அதாவது, ஒவ்வொருகாரியத்துக்கும் மற்றவர்களை

எதிர் பார்த்து, மற்றவர்கள் ஆதிக்கத்தில் இருந்தோ அல்லது தனக்கு மற்றவர்கள் வழிகாட்டக் கூடிய நிலையிலோ மனிதன் இல்லாமல் சுதந்திரத்தோடும் சுய அறிவோடும் வாழத் தகுதி உடையவனாக வேண்டும்.

**-தந்தை பெரியார்**

# பெரியாரைக் குறிப்பிடாமல் பேச முடியாது!



## முத்தமிழறிஞர் கலைஞர்

**பெ**ரியாருடைய பள்ளியிலே சட்டாம் பிள்ளையாக இருந்து நம்மை வழி நடத்தியவர் பேரறிஞர் அண்ணா! அந்தக் கல்லூரியிலே படித்த மூத்த மாணவர்களிலே ஒருவன் நான். நான் தான் இன்றைக்கு உங்களை யெல்லாம் சந்திக்கிறேன் என்றால் எப்படி? எனக்குப் பகுத்தறிவு பாடம் போதித்த பெரியாரை மறவாமல் என்னுடைய உள்ளத்திலே சுயமரியாதை உணர்வை விதைத்த அய்யாவை மறவாமல், அந்த பெரியார் தந்த அருமையான கொள்கைகளையெல்லாம் நாட்டிலே பரப்ப வேண்டும் என்ற அந்த உணர்வோடு உங்களையெல்லாம் சந்திக்கிறேன்.

இன்று உங்களுக்குக் கூட ஒரு வியப்பாக இருக்கும் என்ன கருணாநிதியை அழைத்து கூட்டம் போட்டால் அவர் தேர்தலைப் பற்றி பேசுவார், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்று கேட்பார் என்று எண்ணினால் பெரியாரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே! அண்ணாவைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே! என்று நீங்கள் கருதுவீர்களே யானால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், கருணாநிதி யாரைப் பற்றிப் பேசினாலும், யாரைப் பற்றி புகழ்ந்துரைத்தாலும், யாரைப் பற்றி கவிதை பாடினாலும் அதற்கெல்லாம் மூலவித்தாக இருப்பது சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு இயக்கம். தந்தை பெரியாருடைய போதனைகள், அறிஞர் அண்ணாவினுடைய அறிவுரைகள் இவைகள் இல்லாமல் கருணாநிதியால் பேச முடியாது!


# பெரியாரிடம் உணர்வு பெற்றேன்!




## இனமானப் பேராசிரியர்

**நா**ன் மாணவனாக இருந்தபோது என்னுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதியுமாறு உணர்வுகளை ஏற்படுத்தியவர் தந்தை பெரியார் அவர்கள். நான் தமிழ்ப் பற்றுள்ள மாணவன். தமிழனாக உணர்வு பெற்ற மாணவன் என்ற நன்மதிப்பைப் பெறுவதற்குக் காரணம் தந்தை பெரியார் அவர்கள் ஊட்டிய தன்மான உணர்வும் பகுத்தறிவுச் சிந்தனையுமே ஆகும். அந்த உணர்வுகளிலே ஏற்பட்ட பற்றினால், என்னை நான் ஓர் அளவுக்கு அதில் ஈடுபடுத்திக் கொண்டவன் என்ற முறையில் பெரியாருடைய நினைவு பெரியாருடைய கொள்கை, சிந்தனை மக்களிடத்திலே இடம் பெற்றதாக வேண்டும் என்று விரும்புகிறவனாகவே நான் இருந்தேன்.


# நான் யார்!






(ஈ.வெ.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தை திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தைப்போல் ஞானமும் அறிவுமுள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன்)

# வெங்காயம்!



**நா**ன் கடவுளையும், மதத்தையும், அவை சம்பந்தப்பட்ட எல்லாவற்றையுமே வெங்காயம் என்றுதான் சொல்லுவேன்.

வெங்காயம் என்றால், வித்து இல்லாதது, வெறும் சதை என்பது அச்சொல்லின் அர்த்தம். வெங்காயம், வெறும் காயம்; உயிரற்ற உடல்; விதை இல்லாததால், உரிக்க உரிக்க, தோலாகவே சதையாகவே வந்து, முடிவில் சூனியமாய், விதை இல்லாத தன்மை உடையதாய் முடிவது. ஆகவே விதை வித்து இல்லாத காரணத்தால்தான், அதற்கு வெங்காயம் என்று பெயர்!

**-தந்தை பெரியார்**